**தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கண்டி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) கண்டி மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் தேவைப்பாடு புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தினால் கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் (iv) பிரகாரம் கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டும் | தாமதம் காரணமாக கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்படவில்லை. இணைப்பொன்றாக கட்டுநிதி சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் செயற்பாட்டில் உருவான பணத்தின் கீழ் வருமானம் கிடைக்காத பெறுவனவொன்றாக மொத்த கட்டுநிதி பெறுமதியான ரூபா 5,794,413,673 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் திறைசேரியிடமிருந்து நேரடி கிடைப்பனவுகள் ஏனைய பெறுவனவுகள மற்றும் பொது வைப்புக்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் திறைசேரியிடமிருந்து நேரடி கிடைப்பனவுகள் ஏனைய பெறுவனவுகள் மற்றும் பொது வைப்புக்கள் என்பன உள்ளடக்கப்பட்டு திருத்திய கூற்றொன்று தயாரிக்கப்பட்டு இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பணக் கணக்கு மீதிகள் சீராக்கம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பணக் கணக்கு மீதிகள் சீராக்கம் உள்ளடக்கப்பட வேண்டும். | தாமதம் காரணமாக முற்பணக் கணக்கு மீதிகள் சீராக்கம் உள்ளடக்கப்படவில்லை. |

இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

---

#### (அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்

---

மாவட்ட செயலகத்திற்குரிய வருமான பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரி கட்டுநிதி பெறுவனவு களின் கீழ் நேரடி திறைசேரி பெறுவனவுகளுக்கு மேலதிகமாக ஏனைய மூலாதாரங்களில் பெறுவனவான ரூபா 1,103,737,431 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. | வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் திறைசேரி கட்டுநிதி குறிப்பிடப்படும் போது நேரடி திறைசேரி பெறுவனவுகள்கு காண்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பின்னர் ஏசீஏ-எப் மாதிரியொன்று இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | மாதாந்த பொழிப்புக்களின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் தனிணக்களங்களுக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 218,898,042 ஆன வருமான நிதிச் செயலாற்றல் கூற்றில் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சேகரிக்கப்பட்ட வருமானம் இனங்காணப்பட்டு நிதிச்செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏசீஏ-எப் மாதிரி திருத்தி கூற்றொன்று இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றில் 2018 திசெம்பர் 31 இல் கட்டுநிதிக் கணக்கில் மீதியொன்று இல்லையென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. | ஆண்டின் இறுதியிலுள்ள கட்டுநிதி மீதி கணக்குகளில் காட்டப்பட வேண்டும்.. | தாமதம் காரணமாக இடம்பெற்றுள்ளது. சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பின்னர் ஏசீஏ-எப் மாதிரியொன்று இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மாவட்ட செயலகத்தினதும் 04 பிரதேச செயலகங்களினதும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 05 பேரிடமிருந்து 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி அறவிடப்பட வேண்டிய ரூபா 375,287 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 308,873 ஆன கடன் மீதிகள் 04 ஆண்டு முதல் 05 ஆண்டுகளை மிகைத்திருந்தன. | ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து குறித்த கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 375,287 ஆன மீதியுடைய உத்தியோகத்தர் மரணித்திருப்பதல் விதவை அநாதை நிதியத்தலிருந்து அறவிடுவதற்கும் மற்றைய இரண்டு உத்தியோகத்தர் களிடமிருந்து தவணை அடிப்படையில் அறவிடப்படுவதாகவும் ஏனைய இரண்டு பேரின் புலனாய்வு செய்யப்படுவதாகவும் |
| (ii) 03 பிரதேச செயலகங்களில் வேலையை விட்டுச்சென்ற 03 பதவியணியனியிடமிருந்து ரூபா 174,526 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அதில் ரூபா 170,276 ஆன 02 கடன் மீதிகள் 05 ஆண்டுகளை மிகைத்திருந்தன. | தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் அறவிடப்பட வேண்டிய மீதியொன்று அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு மீதி தற்போது அறவிடப்பட்டு வருகின்றது. ஏனைய 02 கடன் மீதிகள் சட்டமா அதிபரிடம் ஆலோசணை கேட்டு தகவல் கோரப்பட்டுள்ளது. |

**(இ) ஆதனங்கள், உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 06 பிரதேச செயலகங் களுக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் மாவட்ட செயலகத்திற்கரிய உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதி நிதியல்லாத சொத்துக்களில் | நிறுவனத்திடமுள்ள அனைத்து நடைமுறையல்லாத சொத்துக்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதி நிதியல்லாத சொத்துக்களில் | மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பியிருந்த போதிலும் இதுவரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளடக்கப்பட வேண்டும் | |
| (ii) | தவறினை சீராக்குவதற்குரிய ரூபா 350,048,543 ஆன சீராக்க பதிவுகள் ஏசீஏ 06 மாதிரியின் ஏனைய நிறுவனங்களிலிருந்து சொத்துக் கையேற்றலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கையேற்பின் போது சரியான கையேற்பு பெறுமதி நிரூபணமாகவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன் |
| (iii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏசீஏ-6 மாதிரியின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் திறைசேரி சொத்துக்கள் அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,090,304 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் மீதிகள் திறைசேரி சொத்துக்கள் அறிக்கையுடன் ஒப்பிடப்பட வேண்டும். | வேறுபாட்டினை ஏற்றுக்கொள்ககின்றேன் |

**(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **அவதானிப்பு** | | | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| | நிதிப் பிரமாணம் 177(1) | | 06 மாவட்ட செயலகங்களின் சிறாப்பரினால் சேகரிக்கப்பட்ட ரூபா 8,337,713 ஆன வருமானம் 113 சந்தர்ப்பங்களில் வேலை செய்யும் 03 இற்கு 14 இடைப்பட்ட கால தாமதத்துடன் வங்கியிலிடப்பட்டிருந்தது. | அரச வருமானம் நாள்தோறும் இயலுமான வரை வங்கியிலிடப்பட வேண்டும். | ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அடுத்த நாள் வைப்புச் செய்யப்படுகின்றது. போக்குவரத்து வசதிகள் வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் இவ்வாறு தாமதம் காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) பொது நிர்வாக சுற்றறிக்கை<br>----------------------------------------<br>2016 திசெம்பர் 29 ஆந் - திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஹதரலியத்த மற்றும் பஸ்பாக கோரல பிரதேச செயலகங் களுக்குரிய வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஹதரலியத்த பிரதேச செயலகம் 2019 ஆம் ஆண்டின் இரண்டு வாகனங்கள் எரிபொருள் எரிவு பரிசோதிக்கப்படாதிருந் ததுடன் பஸ்பாக பிரதேச செயலகத்தின் வாகனங்களின் ஆரம்ப பரிசோதனையில் தவறொன்று இருப்பதாக அவதானிக்கப்பட்ட காரணத்தினால் மீண்டும் 80 கிலோ மீற்றர் மிகைத்து ஓட்டத்தில் ஈடுபடுத்தி எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(உ) மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கங்கவட்ட கோரல பிரதேச செயலகத்திலிருந்து ஓய்வூதியம் பெற்று வந்த நபரொருவர் 16 ஆண்டுகள் 2 மாதங்களாக 2 ஓய்வூதியங்களை பெற்று ரூபா 2,064,377 ஆன மோசடியொன்றை செய்திருந்தார். இத்தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய கோவையை மாற்றியதன் பின்னர் கட்டாயமாக ஓய்வூதியம் பெறும் அலுவலகத்திலிருந்து அவரின் பெயர் அகறற்ப்படாமையால் ரூபா 2,064,377 ஆன முறைகேடு ஒன்று இடம்பெற்றுள்ளதால் குறித்த நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | பரிசோதனை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஓய்வூதிய திணைக்களத்திற்கு கண்டி பொலிசுக்கும் 2019 பெப்ரவரி 8 ஆந் திகதி தொடர்பு படுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் ஓய்வூதிய பணிப்பாளரின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்வதாக அறியதருகின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 செலவின விடயங்களில் மொத்தம் ரூபா 78,974,060 ஆன நிதிஏற்பாடு சேமிப்பிற்கான ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | செலவின விடயங்களின் கீழ் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டால் அதற்காக தெளிவான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இச்சேமிப்புக்கள் அமைய சேமிப்பொன்றாகவும் எரிபொருள் சிக்கனமாக பயன்படுத்தியமை, பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரடும் 2020 சம்பளம் தவறாக கணிப்பிடப்பட்ட தால் இடம்பெற்றது. |

### 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 ஆம் ஆண்டில் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் ரூபா 5,057,706,170 ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் ஆண்டில் அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து எவ்வித வேண்டுகோளொன்று இல்லாமல் ரூபா 1,505,477,832 தொகை அதாவது 30 சதவீதம் மீள கையளிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,210,791,832 ஆன தொகை மூலதன நிதிஏற்பாடு மீள ஒப்படைப்பாகும். | கிடைக்கும் நிதிஏற்பாட்டை முழுமையாக பயன்படுத்த வேண்டும் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு முடிவடைந்தமை மற்றும் தாமதமாக கிடைத்திருந்த நிதிஏற்பாடு ரூபா 1,510 மில்லின் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. |
| (ஆ) ஓய்வூதிய திணைக்களம் | | |
| i. 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஓய்வு பெற்றோரின் மரணம் தொடர்பாக பிரிவிற்கு பொறுப்பான | ஓய்வூதியம் பெறுவோர் இறந்தவுடன் | கிராம சேவையாளர் பிரிவு கூட்டங்களில் அறிவூட்டப்பட்டதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | கிராம சேவையாளரால் 11 நாட்களுக்கு 109 நாட்களுக்குமான காலப்பகுதியன் பின்னர் அறிவூட்டப்பட்டிருந்தது. | 7 நாட்களுக்குள் கிராம சேவையாளரால் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். | உள்ளக கட்டுப்பாட்டு மறையொன்று பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii. | உடுநுவர பிரதேச செயலகத்தில் 2018 சனவரி முதல் யூன் வரை ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவு செய்யப்படாத ரூபா 377,859 ஆன் ஓய்வூதியம் ஓய்வூதிய பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | இறந்த ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியம் மிகை அறவீடு செய்யப்பட்டு ஓய்வூதிய பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். | தவறு இனங்காணப்பட்டதன் பின்னர் ஓய்வூதிய பணிப்பாளர் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |
| iii. | 4 பிரதேச செயலகங்களின் 26 ஓய்வு பெற்றோருக்கு கொடுப்பனவு செய்யப்படாத ரூபா 841,460 ஆன ஓய்வூதியம் 02 மாதங்களுக்கும் 09 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | ஓய்வூதிய பணிப்பாளரின் 2011 யூன் 14 ஆந் திகதிய 2/2011 ஆம் இலக்க சுறறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படாத ஓய்வூதியம் ஒரு மாத காலப்பகுதிக்குள் மீண்டும் கோரப் படாவிட்டால் கொடுப்பனவு நிறுத்திவைக்க முடியுமாக இருந்த போதும் அதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படாத ஓய்வூதியம் மீண்டும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். | தற்போது பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஓயூவூதிய பணிப்பாளரின் 2019 சனவரி 23 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நேரடிய வங்கி மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றது. |

(இ) மகளிர் பணியகம்

------------------------------

| | | | |
|---|---|---|---|
| i | சுழற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் பெற்ற நலனாலிகளிடமிருந்த 7 பிரதேச செயலகங்களுக்குரிய 2018 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 108,120 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதிய நிபந்தனைகளின் பிரகாரம் கடன்தொகை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டரீதியாக நடவடிக்கை தேவையான எடுக்கப்பட்டு வருகின்றது |

| | | | |
|---|---|---|---|
| ii | இலங்கை மகளிர் பணியக பணிப்பாளரின் 2017 சனவரி 12 ஆந் திகதிய MWGA/WB /கி.பெ.அப./2017 கடிதத்தின் பிரகாரம் 4 பிரதேச செயலகங்களில் 311 பெண்கள் சமுக சங்ககங்களில் 48 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் பெண்கள் செயற்பாட்டு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும். | பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

(ஈ) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

--------------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| i | 2018 ஆம் ஆண்டில் 02 பிரதேச செயலக பிரிவுகளில் குறை நிறையுடைய குழந்தைகளுக்காக ரூபா 1,315,320 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் குறைநிறையுடைய போசணை மட்டத்துடன் முன்பள்ளி பாடசாலை பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறை நிறை மட்டத்துடனான பிள்ளைகள் இனங்காணல் பிரதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களில் ஒத்துழைப்புடன் இடம்பெற வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து பிரதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் பரிந்துரை பெறப்பட்டு குறைநிறையுள்ள பிள்ளை களுக்கு இந்த உணவு வேலைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii | 08 பிரதேச செயலக பிரிவுகளில் செயற்படுத்தப்படும் முன்பள்ளி பாடசாலைகளுக்காக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2017 சனவரி 20 ஆந் திகதிய 1/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் காலை ஆகாரங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொதுச் சுகாதார பரிசோதகரினால் காலை உணவு வேலை பரீட்சிக்கப்பட வேண்டிய போதும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பரிந்துரைத்த உணவுகளை வழங்கப்பட்டமைக்கு எழுத்துமூல சான்றுகள் காணப்படவில்லை. | பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகரினால் அடிக்கடி பரீட்சிக்கப்பட்டு பிரதேச செயலாளருக்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பொதுச் சுகாதார பரிசோதகர் பரீட்சித்தும் எழுத்துமூல பெற்றுக்கொள்ளப்பட வில்லை. சிறுவர் உரிமை மேம்படுத்தல் உத்தியோகத்தரால் பரீட்சிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட போதும் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. |
| iii | 05 முன்பள்ளி பாடசாலைகளில் நலனாலி பிள்ளைகளுக்கு | அரசினால் குறித்த வேலைத்திட்டத்திற் | 2018 ஆகஸ்ட் மாதம் பிரதேச செயலகங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிகமாக 78 பிள்ளைகள் வீதம் அதிகரிப்பதற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் மெததும்பர பிரதேச செயலகத்தின் யூலை மாதம் வரை நலனாலி பிள்ளைகளின் எண்ணிக்கை 184 முதல் 172 வரை குறைவடைந்திருந்தது. இதற்கு மேலதிகமாக 04 பிரதேச செயலகங்களில் நிறை குறைந்த 276 பிள்ளைகளுக்காக மேலும் நலன்களை வழங்குவதற்கு முடியுமாக இருக்கையில் அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காக மேலதிக நிதிஏற்பாட்டினை வழங்குவதற்கு இணக்கப்பாட்டினை தெரிவித்திருந்தமை யால் நலன்கள் தேவையான பிள்ளைகள் இனங்காணப்பட்டு அந்நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 78 சிறுவர்களை அதிகரிக்குமாறு தெரியப்படுத்தப்பட்ட போதும் இறுதி 03 மாதங்களாக இருந்தமையால் சில பிரிவுகளின் ஆசிரியர் பெற்றோர் ஆண்டின் இறுதியில் இந்நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு விரும்பவில்லை. |
| iv | 08 பிரதேச செயலகங்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை போஷாக்கு பொதிகளை பெற்றுக்கொள்ளாத 3010 சந்தர்ப்பங்கள் கபணப்பட்டதுடன் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த செலவினம் ரூபா 6,020,000 ஆக இருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தாய்மார்களை அறிவூட்டி நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தாய்மாருக்கு உறுதிச்சிட்டு வழங்கும் போதும் அறிவூட்டப்படுவதுடன் மற்றும் அறிவித்தல் பலகைகளை காட்சிப்படுத்துவதன் மூலமும் அறிவூட்டல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.. |

(உ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

-----------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| i. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக மெததும்பர பிரதேச செயலகத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 5,300,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதும் குறித்த வேலைப் பகுதி பூர்த்தி செய்யப்படாமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணம் போதியளவில் இல்லாமை காரணமாக திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய நிதிஏற்பாடான ரூபா 1,200,000 மீண்டும் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | அனர்த்தங்களைக் குறைப்பதற்காக பாதிக்கப்பட்டவர்க ளுக்காக துரிதமாக பணம் செலுத்தப்பட வேண்டும். | அதிக மற்றும் நடுத்தர ஆபத்துள்ள 120 குடும்பங்கள் இனங்காணப்பட்டிருந்த போதும் ஆரம்ப சுற்றில் 07 குடும்பங்களுக்கு இழப்பீடு கொடுப்பனவு செய்ய அங்கீகாரம் கிடைத்திருந்ததாகவும் எஞ்சிய குடும்பங்களுக்காக மீள் குடியேற்ற நடவடிக்கைகள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| ii. | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அனர்த்த நிலைமை காரணமாக சேதமடைந்த வீடுகளுக்காக பன்வில பிரதேச செயலகத்திற்கு ரூபா 1,210,446 ஆன நிதி ஏற்பாடு தேசிய காப்புறுதி நிதியத்திலிருந்து | அனர்த்தத்தை குறைப்பதற்காக சேதத்திற்கு உட்பட்டவர் களுக்காக துரிதமாக பணம் கொடுப்பனவு | நிதி ஏற்பாடு தேசிய காப்புறுதி நிதியத்தினால் வழங்கப்படுவதால் உரிய நிறுவனத்திற்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பி நிதி கிடைத்தவுடன் |

| | | | |
|---|---|---|---|
| | கோரப்பட்டிருந்த போதும் ரூபா 69,890 தொகைமாத்திரம் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி கிடைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்பட வேண்டும் | கொடுப்பனவு செய்யப்படும். |
| iii | பன்வில பிரதேச செயலகப் பிரிவில் 2014 முதல் 2018 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அனர்தத்ங்கள் காரணமாக மீள் குடியேற்றத்திற்காக 05 பிரிவுகளில் 06 குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் உரிய நபர்களால் குடியிருப்பதற்கு பொருத்தமான காணி தொடர்பான தகவல்கள் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீள் குடியேற்றத்திற்காக பொருத்தமான காணியொன்று அரசிடம் இல்லாதிருந்தமையால் தற்போது கையேற்பதற்காக காணி இனங்காணப்பட்டு வருகின்றது. பொருத்தமான காணியொன்ற கிடைத்தவுடன் ஆட்களை மீள்குடியேற்றத்திற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| iv. | பாததும்பர பிரதேச செயலகப் பிரிவில் புஸ்ஸலு ஓயா வெளியேறிச் செல்லும் செயற்திட்டத்திற்காக | | |
| | a பெறுகை குழுவின் ஒப்பந்த விடயங்கள் தொடர்பாக அறிவுடன்கூடிய உத்தயோகத்தர் ஒருவர் அங்கத்தவர் ஒருவராக இல்லாமல் இருந்ததுடன் பெறுகை நிறுவனத்திற்கு வெியே நபரொருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.7.7 (அ), (இ) மற்றும் (ஈ) பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் பொறியியலாளர் ஆலோசனை களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பிரதேச பெறுகை குழு மாவட்ட செயலாளரினால் அவரின் நிதி கட்டுப்பாடு தொடர்பாக செயற்பாட்டை கையளித்ததன் பேரில் நியமிக்கப்பட்டுள்ளார். மஹாவலி அதிகாரசபையின் ஆலோசணையின் பேரில் மதிப்பீடு தயாரிக்கப்படுவதால் தொழில்நுட்ப நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுள்ள ஒருவர் இதுவரை பங்குபெறச் செய்யப்படவில்லை. |
| | b ஓயாவிலிருந்து அகற்றப்பட்ட வண்டல் 100 அடி வரை வெளியே போக்குவரத்து செய்து அவ்வண்டலை பரப்பி பதப்படுத்த வேண்டிய போதிலும் ஓயாவில் இருந்து தோண்டப்பட்ட வண்டல் ஓயாவின் இரு பக்க ஓரங்களிலும் போடப்பட்டிருந்தன. | | முறையோன நோக்குடன் வண்டலை அகற்றி ஓரத்தை பலப்படுத்தும வகையிலும் வெள்ள கட்டுப்பாடன வகையில் வைக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| v | யட்டிநுவர பிரதேச செயலகத்தின் நானுஓயா கால்வாயை புனர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டத்திற்காக பெறுகை திட்டமொன்றும் பெறுகை கால அடட்டவணையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுமதி சேர் வரியில் இருந்து ஒப்பந்தக்காரர விடுவிக்கப்படுவதாக உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் ரூபா 657,438 ஆல் மிகை மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1வழிகாட்டல் மற்றும் 4.2.2 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை திட்டமொன்றும் பெறுகை கால அடட்டவணையொன்றும் தயாரிக்கப்பட வேண்டியதுடன் வரியில் இருந்து விடுவிக்கப்படுவதாக உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறே சாத்தியவள ஆய்வொன்றின் பின்னர் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | இது அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நிதிஏற்பாடுகளிலிருந்து நிறைவேற்றப்பட்ட ஒன்றாகும். அதனால் மாவட்ட செயல திட்டத்திற்கு உள்ளடக்கப்படவில்லை. எனினும் கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர் தற்போது கால அட்டவணையொன்று தயாரிக்கப்படும். கேள்வி கோரல் பத்திரத்தில் பெறுமதி சேரி பதிவு கோரப்பட்டுள்ளதுடன் அதில் குறிப்பிடப்படாமையால் பதிவுசெய்யப்படவில்லை என தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் இத்தகைய தவறுகள் சரி செய்யப்படும். கால்வாய் மார்க்கத்திற்கு பல இடங்களால் செல்வதற்கு முடியாத வகையில் மரங்கள் விழுந்துள்ளதால் இயந்திரங்களை எடுத்துச் செல்வதில் சிக்கல்கள் தோன்றின. அதன் பிரகாரம் கால்வாயினுள் இயந்திரங்களை போக்குவரத்து செய்வதற்காக வண்டல் அகற்ற வேண்டியிருந்தது. ஆதலால் கூடுதலான விலை இடப்பட்ட மதிப்பீடொன்றாகும். |
| vi | மண்வரிவு அபாமுள்ள வலயங்களில் வாழும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் நிர்மாணித்து வழங்கும் செயற்திட்டத்தை செயற்படுத்தவுதற்காக 2018 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் தொலுவ மற்றும் உடுநுவர பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 50,000,000 ஆன நிதிஏற்பாடு தேசிய கட்டிட | ஏதேனும் செயற்திட்டமொன்றிற்காக நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டால் அச்செயற்திட்டத்திலிருந்து நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செயற்திறனான மறும் | தொழுவ பிரதேச செயலக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் மொத்த காணிகளின் தகைமை வெளியிடப்பட்டதன் பின்னர் காணி துண்டுகளில் பின்தகைமை இல்லையென |

| | | | |
|---|---|---|---|
| | ஆராய்ச்சி அமைப்பினால் காணிகளின் பொருத்தப்பாடு தொடர்பாக முரணான பரிந்துரைகள் சமர்ப்பித்தமை , பொருத்தமான வீடமைப்பு திட்டங்களை துரிதமாக வழங்காமை உடுநுவர பிரதேச செயலகத்தினால் நிதிஏற்பாடு கிடைக்கும் வரை மீள் குடியேற்றத்திற்காக முன் செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமை காரணமாக குறித்த செயற்பாட்டிற்கு நிதி ஈடுபடுத்தாமல் முழுத் தொகையும் கண்டி மாவட்ட செயலகத்திற்கு கையேற்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். | வெளியிடப்பட்டதால் பணத்தை பணம் மீள் அனுப்பியதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| vii | கங்க இஹலகோரல பிரதேச செயலகப் பிரிவில் 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மண்சரிவு நிலைமை காரணமாக அதிக ஆபத்துள்ள வலயமாக இனங்காணப்பட்ட பெரவில பிரதேசத்தில் 162 குடும்பங்களை குடியேற்றுவதற்காக குருந்துவத்த நகரிற்கு அண்மையில் 25 ஏக்கர் அளவிலான தனியார் காணியொன்று ஒதுக்கப்பட்டு அக்காணியில் மீள்குடியேற்றுவதற்காக 153 குடும்பங்களுக்கு காணி வழங்கி வீடுகளை நிர்மாணிப்பதற்கு 2018 நவம்பர் 16 ஆந் திகதி முதலாவது தவணையாக ரூபா 30,600,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 08 ஆந் திகதி வரை அதில் 125 குடும்பங்கள் எவ்வித நிர்மாணமொன்றையும் மேற் கொள்ளாமல் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வசித்து வந்தனர் | அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வாழ்ந்து வரும் ஆட்களுக்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளை துரிதமாக பயன்படுத்தி மீண்டும் குடியிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கங்க இஹலகோரல பிரதேச செயலக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு முதலில் வழங்கிய இணக்கப்பாட்டின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்ட போதும் பின்னர் இணக்கப்பாட்டை வழங்காமை காரணமாக மாற்று யோசனைகளின் பிரகாரம் மீள்குடியிருப்பிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. |
| viii | கங்க இஹலகோரல பிரதேச செயலகப் பிரிவில் மண்சரிவு ஆபத்து காரணமாக மீள் குடியேற்றப்பட வேண்டிய 243 வீடுகளுக்காகவும் 36 தோட்ட வீடுகளும் இனங்காணப்பட்டிருந்த 135 குடும்பங்களுக்காக மாத்திரம் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அதிக ஆபத்துள்ள பிரதேசத்திலே தற்போது உள்ள 126 குடும்பங்களை அகற்றி மீள் குடியேற்றுவதற்கு முறையான நடைமுறையொன்று | அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வாழ்ந்து வரும் ஆட்களுக்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளை துரிதமாக பயன்படுத்தி மீண்டும் குடியிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>இக்காணியில் வீதி அபிவிருத்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,929,960 செலவில் முறையான திட்டமொன்று இல்லாமல்உள்ளக வீதி முறைமை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | முதியோருக்கான செயலகம்<br>-----------------------------------------------------<br>முதியோருக்கான படிகள் 03 மாதங்கள் தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளப்படாமை பதிவேடுகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் உடுநுவர பிரதேச செயலகத்தின் விடய எழுதுனரால் குழு அங்கீகாரம் பெற்றுக் படிகள் பெறுனர் நீக்கப்பட்டிருந்தார். | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச குழுத் தீர்மானித்து உரிய நலன் பெறுனரின் பெயர் படிகள் கொடுப்பனவு பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிராம சேவையாளர் அறிக்கையின் பிரகாரம் பதிவேடுகளிலிருந்து நீக்கப்பட்டு குழுவின் அங்கீகாரத்திற்காக தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு<br>-------------------------------------------------------------------<br>திறமை அபிவிருத்தி, மகளிர் ஊக்குவிப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் சகல மாவட்டங்களிலும் 4000 பெண்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த்துதல் மற்றும் பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் என்ற அரசின் வேலைத்திட்டம் தொடர்பாக பிவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| i | அமைச்சினால் பெயரிடப்பட்டுள்ள 160 பயிலுனர்கள் 08 உத்தேச தொழிற்சாலைகளில் 06 மாதங்கள் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். அந்த நிறுவனங்கள் பங்குடமை வியாபாரமோ அல்லது கூட்டுறவுச் சங்கமொன்றாக பதிவுசெய்யப்பட்டு பேணிச்செல்லப்பட வேண்டிய போதிலும் ஒரு நிறுவனமொன்றோ அவ்வாறு பதிவு செய்யப்படாதிருந்ததுடன் 05 தொழிற்சாலைகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் முழுமையாக நிறுத்தி மூடப்பட்டிருந்தன. | வேலைத் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தேவையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவாகவும் அதன் செயன் முன்னேற்றம் மும்மாத மேற்பார்வைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக மாவட்ட செயலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| ii | இந்த 08 தொழிற்சாலைகளில் ரூபா 9,781,156 பெறுமதியான 14 இயந்திரங்கள் மற்றும் உபகரண உருப்படிகள் வழங்கப்பட்டிருந்தன. | அரசின் பணத்தை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பொறுப்பான தரப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உபகரணங்களை கையேற்பதற்கு முறையான ஆலோசணைகள் வழங்கப்பட்டிருந்த போதும் அமைச்சினால் அது செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| iii. | 06 உத்தேச தொழிற்சாலைகளில் ரூபா 2,998,344 பெறுமதியான சொத்துக்கள் பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப் பட்டதுடன் வடகொட தொழிற் சாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,187,592 மற்றும் யட்டிவாவல தொழிற்சாலைக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 572,925 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் பாடசாலையொன்றிலும் விஹாரையொன்றிலும் பாதுகாப்பற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தன. | சொத்துக்கள் குறைப் பயன்பாட்டிற்கு, பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங் காணப்பட்டு சட்டரீதின நடவடிக்கைகளை எடுப்பதற்கு சொத்துக்களை முறையாக அரசிற்கு பொறுப்பேற்று வேறு தேவையுள்ள தரப்பினருக்கு விடுவிக்க வேண்டும். | வடகொட மற்றும் யட்டிவாவல – கல்ஹின்ன ஆடைத்தொழிற்சாலைகளுக்குரிய பொருட்கள் மாவில்மடவில் அமைந்துள்ள அமைச்சு கூட்டிணைப்பு செயலாளரின் வீட்டில் காணப்படுகின்றது. |
| iv | சட்டரீதியான செயற்பாடுகள் மூலமாக மீண்டும் அவற்றை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு செயலாளரினால் பிரதேச செயலாளருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் சொத்துக்கள் பயன்படுத்தாமல் இருந்தது. | அரசநிதி செலவிடப்பட்டு பொருட்கள் பயன்படுத்தால் இருக்க கூடாது. | பயன்பாடற்ற நிலைமையொன்று இல்லையென தெரிவிக்கப்பட்டிருந்தது. |

(ஐ) விளையாட்டு அமைச்சு

------------------------------------------

| | | | |
|---|---|---|---|
